**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 60/2020**
**நாள் 12/11/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – மாதவி (PW1) | க/பெயர் – ரவி |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). காயச்சான்றிதழ் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிநகல் **ம.சா ஆ 5** ஆகவும்.

(6). படிவம் 56 **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). மருத்துவ விடுவிப்பு அறிக்கை **ம.சா ஆ 7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. விபத்து சமயத்தில் எனக்கு என்ன வயது, நான் அப்போது என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் 28 வயது மற்றும் தையல் வேலை செய்து மாதம் ரூபாய் 15,000/– வருமானம் ஈட்டிவந்தேன். என்னுடைய வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போதும் தையல் வேலை செய்து வருகிறேனா என்றால் இல்லை விபத்து காரணமாக ஏற்பட்டஉடல் பாதிப்பால் தற்போது வேலை செய்யமுடிவதில்லை. விபத்து எங்கு எப்போது நடந்தது என்றால் 8 வருடங்களுக்கு முன்பு புத்தூரில் இருந்து நடவள்ளூருக்கு நான் என் கணவருடன் இரு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந் சென்றுக்கொண்டிருந்தபோது இரயில்வே கேட் அருகே எங்களுக்கு எதிரே வந்த 1268 என்ற பதிவு எண் கொண்ட பொலேரோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தால் எனக்கு வலது கால் முட்டியில் எலும்பு முறிவும், இடது கையில் எலும்பு முறிவும் ஏற்பட்டது அதற்கு நான் புத்தூரில் முதல் உதவி சிகிச்சை செய்துக்கொண்டு திருப்பதியில் மேற்சிகிச்சை பெற்றேன். எனக்கு கால் முட்டியில் அறுவை சிகிச்சை செய்து தகடு பொருத்தப்பட்டுள்ளது. கதிரியக்கபடம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் அதை நேரடியாக கொடுக்கவில்லை, நீதிமன்றத்தில் கேட்டால் கொடுப்பதாக கூறினார்கள்.

2. நான் இருசக்கர வாகனத்தில் சென்ற போது தலைகவசம் அணிந்திருந்தேனா என்றால் இல்லை. எனக்கு விபத்தை ஏற்படுத்திய பொலேரோ சரக்கு வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உாிமம் இல்லை

என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபத்திற்கு என் கணவருடைய அஜாக்கிரதை தான் முழு காரணம் என்றும் அவர் தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்று மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

3. மேற்படி வழக்கில் நான் விபத்து பதிவேடோ இறுதி அறிக்கையோ அல்லது மோட்டார் வாகன ஆய்வறிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை என் கணவர் தான் ஏற்படுத்தினார் என்றும் 1ம் எதிர்மனுதார் ஓட்டுநருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அது காப்பீடு விதிகளுக்கு முரணாக உள்ளது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் தான் விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அதனால் நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு சொர்ப்பகாயம் ஏற்பட்டு சரியாகிவிட்டது என்றும் மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகபடியான நஷ்ட ஈடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**